www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடர்கின்ற... பயணத்தில்...

-சகாப்தன்-

மலை முகட்டின் மைந்தர்களே
மனித வாழ்வில் எத்தனை நேரம்?
நீங்கள் உழைக்கின்ற உழைப்பு
உலகத்தாரின் களைப்பையே போக்குகின்றது.

காலை முதல் மாலைவரை
களைக்கின்ற வரையில்
உழைக்கின்றபோது
சூரியன் கூடப் பரிதாப்பட்டு
குடைக்குள் ஒளிந்து கொள்ளும்.



ஆனால்
மனிதர்களே நீங்கள் இல்லையென்று
மனிதாபிமானத்தை ஒளித்து வைத்து
உங்கள் வசதிகளையும், உரிமைகளையும்
இருளில் கொழுத்திட்ட
இன்னொருவன் பறிக்கையிலே
இனியும் உங்கள் உணர்வை
சிதைக்க விடலாமோ.

விடிவில்லா வாழ்வில்
முடிவில்லா வறுமையுடன்
தொடர்கின்ற பயணத்தில்
எப்போதும் உங்கள்
எதிர்காலம் ஒளி வீசும்

இதுதான் எம் விதியென்றும்
இருள்தான் எம் வாழ்வென்றும்
எண்ணிவிடாதீர்கள்.
பழையன எல்லாம் தீயிட்டு
புதிய வாழ்வைப் புடமிட்டு
ஒளியேற்றுங்கள்.

அன்றுதான் மலைமுகடு
ஒளிவீசும்; மகிழ்ச்சி கொள்ளும்.

www.tamilarangam.net

# தொழிலாளர்

ஒரு நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்கள் எல்லா வழிகளாலும், எல்லாவற்றையும் பறிகொடுத்து, ஒருவேளை சாப்பாட்டுக்கே மற்றவர்களை எதிர்பார்த்திருக்கும் நிலைதான் இன்றைய நிலைமை. இதே போல் பொருளாதார, அரசியல், சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தாங்களே என்றும், தங்களுடையபலம் எந்தெந்த வழிகளால், மற்றையவர்களால் பலவீனமாக்கப்பட்டுள்ளதென்றும், தாங்கள் எப்படி ஒன்றுமில்லாதவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் தொழிலாளர்களுக்கு யாரும் தெரியப்படுத்துவதில்லை. தொழிலாளர்களின் சக்தியைத் தெரிந்து வைத்திருக்கும் சமூக, விஞ்ஞானவாதிகளும் அந்தந்தக் காலகட்டத்திலுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப, சரியான, புரியக் கூடிய அணுகுமுறைகளைக் கையாளாமல் தங்களுடைய வட்டத்திற்குள்ளேயே இருந்து கொள்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க, எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வு 'பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்தான்' என்று எல்லோரும்சுலபமாக தீர்வு சொல்லிவிட்டு இருந்துவிடுகிறார்கள். இப்படியே தொடர்ந்து 'ரெடிமேட் தீர்வை' மட்டும் சொல்லிக் கொண்டிருக்காமல், தீர்வுக்கான வழிமுறைகளைச் சரியான வழியில் அணுகுவதும் அவசியமாகிறது.

இலங்கையில் மலையகம், கடல், நிலம், குடிசைக் கைத்தொழில், சீவல் போன்ற பல வழிகளில் தொழில்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும் தொழிலாளர்கள் என்ற ரீதியில் இவர்கள் ஒரே விதமாகவே ஒடுக்கப்படுகிறார்கள். இவர்களுடைய உழைப்பு ஒரே விதமாகவே உறிஞ்சப்படுகிறது. இவர்களுடைய பலம் இவர்களுக்கே தெரியவராத நிலையில், உழைப்பை உறிஞ்சும் அட்டைகளால் இவர்கள் பலவீனமாக்கப்படுகிறார்கள். இனவாதம் போன்ற மாயைகளால் குழப்பப்பட்டு, ஒன்றாகச் சேர்ந்து பலமடைய முடியாதநிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் பிளவுபடுத்தப்படுகிறார்கள். எதிர்ப்புணர்வு அல்லது போராட்ட உணர்வு தொழிலாளர்களிடம் தோன்றிவிடாதபடி மதம், மது போன்ற பல வழிகளால் கோழைகளாக்கப்படுகிறார்கள். இப்படி எல்லாம் தாங்கள் மற்றவர்களுக்காகப் பாவிக்கப்படுகிறோம் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான் இவற்றுக்கெதிராக ஒன்றிணைந்து போராடி சுரண்டலை ஒழிக்க முடியும்.

சுரண்டல் எப்படி நடைபெறுகிறது என்பதை அன்றாடம் காணுகின்ற சில உதாரணங்கள் மூலமே அறிந்து கொள்ளலாம். சாதாரண கடற்தொழிலாளியை மட்டும் நோக்குவோம். அவனிடம் பொத்தல்கள் உள்ள வலை மட்டுமே இருக்கிறது. இரவிலே கடலுக்குப் போய், கண் விழித்து வலை வீசி மீன் பிடித்து வருகிறான். இவன் கரைக்கு வந்ததுமே, உழைப்புக்காகத் தன் உடம்பை எந்த விதத்திலும் பயன்படுத்தாத ஒருவன் வந்து கடற்தொழிலாளிபிடித்து வந்த மீன்களுக்கு இருபத்தைந்து ரூபா விலை பேசுகிறான். (இதன் உண்மை மதிப்பு எழுபத்தைந்து ரூபா வரும்). உண்மை மதிப்பை அறியச் சந்தர்ப்பமேயில்லாத கடற்தொழிலாளி மொத்தமாக மீன் விலைப்படுகிறது என்பதனுல் இருப்பதையெல்லாம் இருபத்தைந்து ரூபாவுக்கே விற்றுவிட்டுப் போய்விடுகிறான். அவனுடைய அன்றைய சீவியத்துக்கே இது போதுமானதாக இருக்க மாட்டாது. எனவே மறுநாளும் அவன் உழைத்தேயாகவேண்டும்.

கடற்தொழிலாளியின் உழைப்பைக் கால் விலையில் பெற்றுக் கொண்டவனோ வாங்கிய இடத்திலிருந்து கொஞ்சத் தூரமே நடந்து வாடிக்கையாளர்களுக்கு மீன்களை சில்லறையாகவே நல்ல விலைக்கு விற்றுஇலாபத்தைப் பெற்றுக் கொள்வதுடன், மறுநாள் கடற்தொழிலாளியிடம் உழைப்பைப் பறிப்பதற்குத் தேவையான பணத்தையும் மேலதிகமாகப் பெற்றுக் கொள்கிறான்.

ஆக, நாள் முழுக்க உழைத்தவனும், அவன் குடும்பமும் அரைப் பட்டினியுடன் இருக்க, எந்தவித உழைப்புமில்லாமல் மற்றவர்களின் உழைப்பை ஏமாற்றிப் பறித்து கொள்ளை இலாபம் அடைந்தவனோ, மற்றைய நாட்களுக்கான சேமிப்பையும் சேர்த்து வைக்கிறான். உழைப்பாளர்கள் தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறக் கூடிய அனைத்து வழிகளையும் சுரண்டல்காரர்கள் தடைசெய்து வைத்துள்ளார்கள். இவர்கள் இப்படிச் செய்வது தவிர உழைப்பாளிகளும் தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு 'விதியே' என்று 'திருப்தி'யடைகிறார்கள். தாங்கள் சுரண்டப்படுவதை எதிர்த்துப் போராடுவதற்காக இவர்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையகத் தொழிலாளர்களை நோக்கினால், ஒரு பிரசைக்குரிய உரிமைகள் அற்று, தலைமையை சந்தர்ப்பவாதக் கும்பலிடம் பறிகொடுத்துவிட்டு பரம்பரை, பரம்பரையாக உறிஞ்சப்பட்டு வருகிறார்கள். 50கிறாம் இலங்கைத் தேயிலை 5 டொச் மார்க்குக்கும் அதிகமாகக்கூட மேற்கு ஜேர்மனியில் விற்பனை செய்யப்படுகிறது. (இது 85 இலங்கை ரூபாய்களாகும்.) ஆனால் இவர்களுக்குக் கிடைக்கும் கூலியோ வெறும் 2 டொச்மார்க்குள் மட்டுமே. ஊதியமாகவே சொல்ல முடியாத நிலையில் கூலி வழங்கப்படுவதுடன், இவர்களுக்கென எந்தத் தேவையும் பூர்த்தி செய்யப்படவில்லை. குடியிருப்பதற்கு ஏதுவான இருப்பிடமோ, மலசலகூட வசதிகளோ, வைத்தியநிலையமோ, பாடசாலைகளோ எதுவுமே சரியாக வழங்கப்படாதநிலையில் இன்றும் கூட இவர்கள் இலங்கையின் அந்நியச் செலாவணியின் பெரும் பகுதியைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் சுரண்டப்படுவதை, அடிமைப்படுத்தப்படுவதை அறிய முடியாமல், இவர்களுடைய தலைமையும் கூட்டாக இணைந்து தடுத்து வருகிறது. இதற்காக அவ்வப்போது போலிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்படி அனைத்து தொழிலாளர்களுமே ஒடுக்கப்படுகையில், சுரண்டப்படுகையில் இவற்றை எதிர்க்க இவர்கள் அணிதிரள முயற்சிக்காமையின் காரணம் என்ன? தொழிற்பிரிவுகளை விலக்கி ஏன் ஒன்றுபட முடியவில்லை? இவற்றுக்கான காரணிகளில் யதார்த்தமான புறச் சூழ்நிலையும் ஒரு காரணியாகும். எதுவுமேயற்ற நிலையில் அன்றைய நாளுக்கான தேவைகளைக்கவனிப்பதே இவர்களுக்குப் பிரதானமாயிருக்கிறது. சுரண்டலை எதிர்க்கப் போய் கிடைக்கும் ஒரு நேரச் சாப்பாட்டையும் இழப்பதா என்பது அநேகரின் 'பயம்'. இது பெரிய போராட்டம், இப்போதைக்குச் சரிவராது என்பது பலரின் விரக்தி. முற்போக்குச் சக்திகளைச் சுலபமாக இனம் கண்டுகொள்ள முடியாமையும் ஒரு காரணமாகிறது. சரியான போராட்ட வழிமுறைகளைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளும் இவர்களுக்கு இலகுவில் கிடைத்துவிடுவதில்லை. முழுமையான விடிவுக்கான சரியான போராட்டம்பற்றிய தெளிவின்மையும், தங்களது பலத்தை அறிய முடியாமையும், யதார்த்த அரசியலுக்கூடாகப் போராட்டத்தைப் பார்க்க முடியாமையுமே தொழிலாளர்களால் போராட்டத்தை முன்னெடுக்க முடியாதபடி வைத்துள்ளன.

இவர்களின் நிலை பற்றியும், போராட்ட வழி முறைகள் பற்றியும் 'நன்றாகப் படித்திருக்கும்' சமூக விஞ்ஞானவாதிகள் யதார்த்தமான முறையில் அவர்களை அணுகாமல், தாம் கற்றவற்றை எந்தவித மாற்றத்திற்கும் உட்படுத்த முனையாது, படித்தவற்றை 'அப்படியே' நடைமுறைப்படுத்த முயல்வதுதான் இவர்களை அந்நியப்படுத்தி வைத்திருப்பதுடன், இவர்களுடைய பங்களிப்பையும் உரிய முறையில் கிடைக்காமல் செய்து விடுகிறது. 'விளக்கின்' வெளிச்சத்தில் நின்றுகொண்டு இந்த சமூகவிஞ்ஞானவாதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் மற்றவர்களையும் இந்த வெளிச்சத்திற்குள் வரும்படி கூறுகிறார்களே தவிர இருட்டான இடங்களுக்கு வெளிச்சத்தைத் தாங்கள் கொண்டு போவதாகத் தெரியவில்லை. இந் நிலையானது 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பது போலாகிவிடக்கூடாது.

எனவே முற்போக்குவாதிகள், புத்திஜீவிகள், சமூகவிஞ்ஞானிகள் என்போர் தங்களுடைய 'கூட்டை' விட்டு வெளியே வரவேண்டும். தாம் கற்றவற்றைத் தாம் இருக்கும் காலகட்டம், சூழ்நிலைக்கேற்ப, மற்றவர்களுக்கும் புரியக் கூடிய விதத்தில் தெளிவுபடுத்த வேண்டும். சரியான வழியில் தொழிலாளர்களை அணிதிரட்ட வேண்டும். இதைச் செய்யத் தவறின் 'பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்' என்பது வெறும் கோசமாகவே இருக்கும்.

தொழிலாளர்கள் தலைமையில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை எல்லோரும் தெரிந்து கொள்வதுடன், அதற்கான செயல்முறைகளிலும் ஈடுபட வேண்டும். குட்டி முதலாளித்துவ, மத்தியதர வர்க்கத் தலைமைகளினால் ஆரம்பிக்கப்பட்ட 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' இப்போது எந்தக் கட்டத்திலிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. இதே நிலையில் போராட்டம் நின்றுவிடாமல் இருக்க, இதே நிலையே மீண்டும் ஏற்பட்டு விடாமலிருக்க, புரட்சிகர சக்திகளான பாட்டாளிகள் ஒன்றிணைக்கப்பட்டு, கடந்த கால அநுபவங்களையும் பாடமாகக் கொண்டு, போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் குறிப்பிட்ட வர்க்கத்தின் நலனுக்காக மட்டுமாக இல்லாமல், எல்லைகளுக்காக மட்டுமானதாக இல்லாமல் அனைத்து உழைக்கும் மக்களினதும் விடிவுக்கானதாகவும், ஒடுக்கப்படுபவர்களின் விடுதலைக்கானதாகவும் போராட்டம் முன்னெடுக்கப்படும். இந்தப் போராட்டத்தின் மூலம் அரசியல், பொருளாதார, சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதே விடிவுக்கான வழியாகும்.

வறுமை, கொடுமை, அடக்குமுறை
மலிந்த பூமியில் கொழுந்துவிட்டது
தேயிலை.
●
தேயிலைக்காட்டு துயர் மூச்சில்
சரிந்தன மனிதங்கள்
நின்றன மரங்கள்.
●
எச்சரிக்கை மலைகள் மீது
நடமாடிக் கொண்டிருக்கின்றன
எரிமலைகள்

— சு. முரளிதரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈரமான பாறைகள்

- சிவம் -

கட்டுமரத்தில் ஏறி
பச்சையாகவே
மீன் பிடுங்கி வருவோம்.
கரையோ
சருகுகள் பொறுக்கி
எம்மையும் வாங்கும்.

அலையளந்து முடிக்காத
கடல் இரைந்து கரையமைத்து
மணல் பரப்பும்
கரும்பாறை இடுக்குகளில்
நாம் பதித்து
அலை மிதித்து அழிந்துபோகும்
சுவடுகள் போலவே
எம் உழைப்பு.

வாழ்க்கை நிறைய
ஓட்டைகள்
வலையைப்போலவே.

எத்தனை முறை
தீப்பிடித்தாலும்
வர்ணம் பூசிய
கனவுகளைவிட
கறுப்பு வெள்ளை
நிஜங்களையே திரையிடும்
எங்கள்
நெஞ்சக் கொட்டகை.

கண்ணீர் சிந்திக் கடலையே
உப்பாக்கிய
கரையோர மீன்கள் நாங்கள்
நீந்துவதெல்லாம் வாழ்க்கை முழுவதும்
வறுமை நெருப்பில்தான்.

அதனாற்தான்
சுரண்டல் வடுக்களும்
பெரிதாக
வலிப்பதில்லை எங்களுக்கு.

எனினும் அது
பிராண்டிப் பிய்த்துவிட்ட
காயங்களில் முளைத்து வளரும்
ஒரு
நம்பிக்கை.

தளைப்பதற்கு நீருற்ற
தயார் நிலையில் யார் இன்று?
ஆயுதக்கிட்டங்கிப்
பேரப்பேச்சில்
சிலரும்
அகில உலகப் புரட்சிப்
பேச்சில் சிலருமாய்....

நாங்கள் இன்னமும்
நடுக்கடலில்.

கட்டுமரம் போதும் எங்களுக்குக்
கரைசேர.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் பூமியை விற்று
ஏனடா
போர்க்கப்பல் வாங்குகிறீர்கள்?

ஜாக்கிரதை
அதற்குள்ளேயே அணுகுண்டு வரும்
இலவசமாகவே.

வெடிப்பதற்குப் பரந்த வெளியாக
உங்கள் பலவீனங்கள்..
சாவதற்கு நாங்கள்.

ஓங்கியடிக்கும் ஆயுத அலையும்
ஒரு நாள்
ஓய்ந்து போகும்.
வருவீர்கள் அடிப்படை புரிந்து
அடிமட்டம் தேடி.

இரும்புத்தூண்டில் உருசி
மயங்கிப்போன இளைஞர்களே
அதுவரை ஆடுங்கள்.

நாங்கள் பாடம்
படிக்கிறோம்.
ஓயாமல் பாறையில் மோதிச்சிலிர்க்கும்
அலைகளைப்பார்த்து.

எம் இனிய
புத்தகப் பிரியர்களே
யதார்த்தம் தின்று
பழகுங்கள்.

நீங்கள்
புரட்டிப் பார்க்க மறுக்கும்
புத்தகங்களாய்
நாங்கள் இருக்கும்வரை
எங்களுக்கு முகவுரை எழுத
உங்களால் எப்படி முடியும்?

மே தினமே நீ
ஆண்டுக்கொருமுறை வந்து போ
எங்களைத் தீண்டாமல்.
நாங்கள் சில
நீர்ச்சுழி முனைகளைத்
தாண்டும் வரை.

இது
தீப்பிடித்துச் சிவந்த
ஒரு
கடல் வளர்த்த கவிவனம்.

எல்லோரும் உள்ளே போய்ப்
பூப்பறித்து வாருங்கள்.
ஒன்று சேர்ந்து
நாளையொரு மாலைகட்டுவோம்



www.tamilarangam.net


# விளையாட்டுக்கள் வியாபாரம்

- கவிதாஞ்சலி -

பார்ப்பதற்கு
விளையாட்டு; பாடைக்குள்ளும்
உடல்களை அனுப்பும்.
நாங்கள்
கொடுப்பதோ சில
காசுகள்.
சேர்வதோ அவர்களுக்கு
கோடி கோடி ....

எங்களுக்கும் புரியவில்லை
அவர்களுக்கும்; விட
நோக்கமில்லை.

மனங்களோ பிளவு
காண்கிறது ...
சுரண்டலோ சூறையாடுகிறது.
சூன்யம்
உலகமாகிறது.



இன்று
முதலாளித்துவத்தின்
கடைச் சரக்கு
விளையாட்டு.
வீரர் விலையோ சில; கோடி
மரணங்கள்...

வியாபாரம்
முறியாதிருக்க முயற்சிகள்
தாராளம்; பொலிஸ், இராணுவம்
இவை
யாவும் மக்களின்
பாதுகாப்புகள் .... ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# புதிய பாதை

ரா. நிருபா

ஜெர்மனியில் வாங்கிய 'கோட், சூட்' மற்றும் அழகு சாதனப்பொருட்களால் தன்னை அழகுபடுத்திக் கொண்ட ஜீவானந்தன் அறையிலிருந்து வெளியே வந்தபோது தங்கை பவானியும், தாய் தனபாக்கியமும் அவனுக்காகவாடகைக் காரினுள் காத்திருந்தனர்.

ஜீவானந்தன் இன்று பெண் பார்க்கப் போகிறான்.

பந்த பாசங்களிலிருந்து விலகி, ஊர் உறவுகளை மறந்து, தனிமையில், தனக்கென ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பின்றி ஆறு வருடங்களாக ஜெர்மனியில் வாழ்ந்துவிட்டான் ஜீவானந்தன். கடைசி ஆண்டில் தாய் எழுதிய கடிதங்கள் அவன் மனதில் மாற்றத்தை உண்டு பண்ணின.

"மகனே, நீ எங்களைவிட்டுப் பிரிந்து ஆறு வருடங்கள் போய்விட்டன. தங்கையும், நானும் உன்னைப் பார்ப்பதற்கு ஆவலாக உள்ளோம். அப்பாவின் செத்த வீட்டில் கூட நீ கலந்து கொள்ளவில்லை. நான் சாவதற்கு முன்னர் உன்னோடு ஆசை தீரக் கதைக்க வேண்டும். பவானிக்கு திருமண வயது வந்துவிட்டது. நீ திருமணம் செய்தபின்தான் அவளும் செய்வாளாம். உனக்கும் முப்பது வயதாகிவிட்டது. அவளுக்கென்று நான் ஒன்றும் சேர்த்து வைக்கவில்லை. நீ சீதனம் வாங்கித்தான் அவளுக்குக் கொடுக்க வேண்டும். எனக்கும் வயது போய்விட்டது. அவளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்தால்தான் நான் நிம்மதியாகச் சாவேன். வெளிநாடுகளிலிருந்து நிறைய இளைஞர்கள் வந்து நல்ல சீதனத்தோடு கலியாணம் செய்கிறார்கள். உனக்கும் நல்ல சீதனம் தருவார்கள். வேளைக்கு வருவதற்கு முயற்சி செய்" என்று தனபாக்கியம் எழுதியபின்தான் தனக்கு முப்பது வயதாகிவிட்டதை ஜீவானந்தம் உணர்ந்தான்.

திருமணம்... மனைவி என்ற புது உறவு.. பிள்ளைகள்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆரம்பத்தில் வெறும் நினைப்பாக இருந்தது நாளடைவில் ஆசை
யாக மாறிவிட்டது. அத்துடன் திருமணச் சந்தையில் தானும் கூடிய விலையில்
விலைப்பட வேண்டும் என்ற துடிப்பும் அவனுக்கு இருந்தது.

இப்போது அவன் இரண்டு மாத லீவில் இலங்கைக்கு வந்திருக்
கிறான். அவனுக்குப் பேசிய நிரஞ்சனாவின் புகைப்படத்தை தனபாக்கியம் கா
ண்பித்த நேரத்திலிருந்து நிரஞ்சனாவைப் பற்றி நினைத்து அதில் உண்டான
இன்ப வெள்ளத்தில் ஜீவானந்தன் மிதந்து கொண்டிருந்தான்.

நிரஞ்சனா வீட்டு முற்றத்தில் கார் வந்து நின்றதும் அந்த வீட்
டை ஆச்சரியமாகவும், ஆசையாகவும் பார்த்தான் ஜீவானந்தன்.

நவீன முறையில் கட்டப்பட்ட அழகான பெரிய வீடு. அதிஷ்ட
வசமாக பூமிக்காரர் கண்ணில் படவில்லை போலும். வீட்டை எப்படியாவது
தனக்குச் சொந்தமாக்கிவிட வேண்டும் என அவன் தனக்குள் திட்டம் போ
ட்டுக் கொண்டான்.

நிரஞ்சனாவின் தாயார் அவர்களை வீட்டு வாசலில் வரவேற்
றாள். நிரஞ்சனாவைத் தவிர மற்றவர்கள் வரவேற்பறையில் அமர்ந்தனர்.

"தம்பி வெளிநாட்டில் என்ன வேலை செய்யிறீர்?" நிரஞ்சனா
வின் உறவுக்காரர் ஒருவர் கேட்டார்.

ஒரு நிமிடம் என்ன சொல்வதென்று தெரியாமல் ஜீவானந்தன்
குழம்பிப் போனான். 'நான் ஜேர்மனியில் உணவு விடுதியொன்றில் கோப்பை
கள் கழுவும் வேலை செய்வதென்று சொன்னால் பெண் தர மறுத்து விடுவா
ர்கள்'

"கோட்டல் ஒன்றில் மனேச்சராக இருக்கிறேன்" என்றான்.

"என்ன படிச்சிருக்கிறீர்?" நிரஞ்சனாவின் அம்மா கேட்டாள்.

"ஏ. எல்" ஜீவானந்தன் முகத்தில் பெருமை படர்ந்திருந்தது.

எட்டாம் தரத்திற்கு மேல் பாடசாலை போக மறுத்து, அப்
பாவுடன் சேர்ந்து தோட்டம் செய்து, பின் ஒருநாள் ஜேர்மனிக்குச் சென்ற
அண்ணனை நினைக்கையில் பவானிக்கு வெட்கமாகவும், சிரிப்பாகவும் இருந்தது.

நிரஞ்சனா தேநீர் கொண்டு வந்து எல்லோருக்கும் பரிமாறி
விட்டு ஒரு கதிரையில் அமர்ந்தாள்.

"நிரஞ்சனா படிக்கிறாவா?"

"ஓ. எல் பாஸ் பண்ணினதோடு வீட்டில்தான் இருக்கிறா" என்று

www.tamilarangam.net

நிறஞ்சனாவின் தாயார் கூறியபோது ஜீவானந்தனுக்குத் திருப்தியாக இருந்தது.

பாங்கவுடன் யாரையும் கவரக் கூடிய நிறஞ்சனாவின் அழகு அவனையும் கவர்ந்துவிட்டாலும் 'கறுப்பி' என்ற குறை அவன் அடி மனதில் இருக்கத்தான் செய்தது.

அநேகமான ஆண்கள் தமக்கு வரப்போகும் மனைவியின் உடற் கவர்ச்சியையும், அவள் கொண்டு வரப் போகும் சீதனத்தின் தொகையையுமே காதலிப்பார்கள். உள்ளத்தில் உள்ள உண்மையான அன்பைக் காதலிப்பவர்கள் மிகமிகக் குறைவு. அவர்களில் ஒருவனாக ஜீவானந்தம் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"மருமகன் சேர்த்து வைத்துவிட்டுப் போன சொத்தெல்லாம் நிறஞ்சனாவுக்குத்தான். இந்த வீடு, வங்கியிலிருக்கும் ஐந்து லட்சம் காசு, தோட்டக் காணிகள்" என்று நிறஞ்சனாவின் அம்மம்மா வரிசைப்படுத்திக் கூறிய போது நிறஞ்சனா கறுப்பு என்ற குறை நீங்கி அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி பரவியது.

ஜீவானந்தன் தனது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டான்.

திருமண வைபவத்தை நடத்தப் பொருத்தமான திகதியைக்குறிப்பதற்கு பெரியோர்கள் அவசரமானார்கள். நிறஞ்சனாவின் விருப்பத்தை ஒருவரும் கேட்கவில்லை.

பெண் என்பவள் விருப்பு, வெறுப்பு இல்லாத உணர்ச்சியற்ற வெறும் ஜடம் என்று நினைத்துவிட்டார்களோ?

"நான் ஜீவானந்தனுடன் தனியாகக் கதைக்கலாமா?" நிறஞ்சனா தனது விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்தாள். அவளுடைய விருப்பம் நியாயமானதெனப் 'பெரியவர்களால்' ஏற்றுக்கொள்ளப்பட்டு இருவரும் தனிமையை நாடி ஒரு அறைக்குள் சென்றனர்.

நிறஞ்சனா தான் சொல்ல விரும்பியதை சுருக்கமாக விளக்கிய போது ஜீவானந்தன் முகம் சுருங்கிப் போனது. சில விநாடிகள் மௌனமாகக் கழிந்தன.

ஜீவானந்தன் அறையைவிட்டு வெளியே வந்தான்.

"அம்மா வாங்கோ போவம்" அவனுடைய சிவந்த கண்களில் ஏமாற்றம் தெரிந்தது. வார்த்தைகள் கோபம் கலந்து தொனித்தன.

நிறஞ்சனாவின் தாயாரைத் தவிர மற்றவர்கள் என்ன? ஏது என்று

www.tamilarangam.net

ஒன்றுமே புரியாமல் திகைத்தனர்.

"முன்னரே சொல்லியிருந்தால் வீட்டுப்படியே மிதித்திருக்க மாட்டேன். மானங் கெட்டவர்கள். வெட்கமில்லாமல் தனியவும் கூட்டிக்கொண்டு போய்க் கதைக்கிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே ஜீவானந்தன் வெளிவாசலை நோக்கி நகர, அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளியேறினார்கள்.

நிறஞ்சனா இந்திய இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டவளாம்!

பணம், வீடு, நிலம் என்று பேரம் பேசி சீதனம் வாங்கும்போது சாதாரணமாக நினைக்கும் இந்த மனிதர்கள் இவ்விடயத்தைப் பெரிதுபடுத்தியது ஏனோ? கற்பு என்றால் என்னவென்று சரியாகத் தெரியாது போலும்.

கற்பு என்று பெண்களுக்கு மட்டும் வேலி போடும் ஆண்கள் எல்லோரும் சுத்தமானவர்களா? பருவ வயதில் எத்தனையோ தகாத காரியங்களைச் செய்துவிட்டுத் திருமணம் என்று வந்தவுடன் தனக்கு வரும்பெண் புடம் போட்ட தங்கமாக இருக்க வேண்டும் என்கிறார்கள். சந்தர்ப்ப, சூழ்நிலையால், அதுவும் நாட்டில் நடந்த இராணுவ நெருக்கடியால், காமுகரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவள் கற்பிழந்தவளா? இவளுடன் வாழத் துணியாத ஆண்கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்களில்லை.

நடந்த சம்பவத்தை மறைத்து நிறஞ்சனாவால் மணமுடித்திருக்க முடியாதா? யாரையுமே ஏமாற்றி வாழ அவள் விரும்பவில்லை. தன் உள்ளத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய, உண்மையான ஒருவனைத்தான் அவள் எதிர்பார்த்தாள். அவளுடைய எதிர்பார்ப்பில் எல்லாமே ஏமாற்றமாக இருந்தன.

தன்னைப் போன்ற சிலர் தற்கொலை செய்து கொண்டதை நிறஞ்சனா கேள்விப்பட்டிருந்தாள். தற்கொலை செய்வது கோழைத்தனம், மடமை என்றே அவள் நினைத்தாள்.

மூடச் சமூகத்திற்குப் பயந்துதானே சிலர் தற்கொலைசெய்து கொள்கிறார்கள். ஒருவரை மீறி நடந்தவைக்காக ஏன் பயப்பட வேண்டும்? பழமைக் கொள்கைகளில் புரையோடி நல்லது, கெட்டது விளங்காமல் தம் மனம்போனபடி தீர்ப்புக் கூறும் மக்கள் என்ற அந்தச் சமுதாயம் ஓர் சாக்கடை.

ஆணுக்கு ஓர் நீதி. அவன் என்ன தவறு செய்து விட்டாலும் மதிக்கப்படுகிறான். ஆனால் பெண் ஆடவனைப் பார்த்து சிரித்தாலே போதும். உடனே அவளுக்கு மறுகற்பித்து ஒரு தினுசாகப் பார்த்துக் குசுகுசுத்துப் பேசுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் நிறஞ்சனவைச் சும்மா விடுவார்களா?

அவள் உதவாக்கரை, எமக்கு முன் நிற்கத் தகுதியற்றவள், அவள் தலை நிமிர்ந்து நடக்கக் கூடாது என்பதுதான் சமுதாயத் தீர்ப்பு.

நிறஞ்சன சமூகத்தையும், அதன் கொடுமைகளேயும் துச்சமாக மதித்தாள். கேலிச் சிரிப்புகளாலும், பட்டங்கள் சூட்டும் வல்லமையினலும் பெண்ணைத் தற்கொலை செய்யத் தூண்டும் அந்த மனிதர்களை அவள் பொருட்படுத்தவில்லை.

காலங் காலமாக இச் சமூகத்திற்கு அடிபணிந்து பெண்ணினம் அழிந்ததுதான் மிச்சம். ஆகவே அவள் எதிர் நீச்சலிடத் துணிந்தாள். இவர்கள் முன்னிலையில் வாழ்ந்தே காட்டுவேன் எனச் சபதம் கொண்டு இன்றுவரைக்கும் வாழ்ந்துவிட்டாள்.

இன்றுவரை நிறஞ்சனவுடன் வாழ முன்வராத ஆண்கள் இனிமேலா வரப் போகிருர்கள்? மணமுடித்துப் பிள்ளைகள் பெற்று வாழ்ந்தால்தான் வாழ்க்கையா? பெண் பார்க்கும் அந்தப் பொம்மை நாடகம் இனிமேல் வேண்டாம். அவளால் தனித்து வாழ முடியும்.

ஜீவானந்தனுக்காக எத்தனேயோ பெண்கள் பார்க்கப்பட்டன. அநேகமானவர்கள் நிறஞ்சனவின் நிலையிலேயே இருந்தனர். இதனல் இலங்கையில் வசிக்கும் தமிழ்ப் பெண்ணை மணந்து கொள்வதில்லையென அவன் முடிவெடுத்தான்.

ஜீவானந்தன் நாளை காலை மீண்டும் பயணமாகிறன் ஜேர்மனிக்கு. பவானியும், தனபாக்கியமும் அவனுக்கு கொடுத்துவிடப் பலகாரங்கள் செய்து கொண்டிருந்தனர்.

திடீரென கெலிக்கொப்ரர் ஒன்று வானத்தில் வட்டமிட்டுப் பறந்தது. குண்டு சத்தங்கள் கேட்டன.

"மறுபடியும் போர் தொடங்கிவிட்டதாக்கும்"

தூங்கிக் கொண்டிருந்த ஜீவானந்தனைப் பவானி அவசரமாக எழுப்பினுள். எல்லோரும் ஒரு அறைக்குள் சென்று உட்பக்கமாகப் பூட்டிக் கொண்டார்கள்.

ஊர் மக்கள் தத்தம் வீடுகளுக்குள் தஞ்சமடைந்தனர். மின்சார விளக்குள் அணைக்கப்பட்டன. எங்கும் நிசப்தம் நிலவியது. குண்டுச் சத்தங்கள் மிக அண்மையில் கேட்டன. ஆங்கிலம் கலந்த கிந்தி மொழி ஆங்காங்கே கேட்டு மக்களைப் பயமுறுத்தியது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு இராணுவத்தினர் ஜீவானந்தன் வீட்டுக் கதவை உடைத்தெறிந்துவிட்டு உள்ளே வெறியுடன் பாய்ந்தனர். ஒருவன் தனபாக்கியத்தை நோக்கியும், மற்றவன் பவானியை நோக்கியும் . . .

ஜீவானந்தன் திகைத்து செய்வதறியாது நின்றான். அவன் முன்னிலையிலேயே தாயையும், தங்கையையும் கேவலமாக அந்த இராணுவ வெறிநாய்கள் . . .

அந்த ஊரில் பெண்களின் கதறல் கேட்டது. ஆண்கள் தப்பியோடும் பாதச் சுவடுகள் மண்ணில் பதிந்தன. அச்சத்தால் சில உயிர்கள் தானாகப் பிரிந்து போயின. அட்டகாசக்காரர்களின் ஆனந்த ஒலியும் இடையிடையே கேட்டது.



www.tamilarangam.net

"அம்மா"

தலைவிரிகோலமாக, ஆடைகள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டு, பிணமாக மல்லாந்து கிடந்த, தனபாக்கியத்தின் அருகில் சென்ற பாவானி சடலத்தையே வெறிக்கப் பார்த்தாள்.

கிராஜுவத்தின இயற்கையாக வந்த இறப்பு என்றால் பரவாயில்லை. ரால் அதுவும் பலாத்காரப்படுத்தப்பட்டு...

நினைக்கையிலே பவானிக்கு அழ வேண்டும் போலிருந்தாலும் காய்ந்த நெஞ்சமும், தொண்டையும் அழ மறுத்தன.

பத்து நாட்களின் பின் ஒருநாள்—

பவானி அண்ணன் தன்னை விட்டுப் போய்விட்டதை எண்ணி வருத்தப்படவில்லை. ஆத்திரப்பட்டாள். நாட்டு விடுதலைக்காக எத்தனையோ அண்ணக்கள் உயிரை விட்டுவிட்டார்கள். ஜீவானந்தனும் அப்படி இறந்திருந்தால் பவானி பெருமைப்பட்டிருப்பாள். அவன் பேடியாகத் தூக்குப் போட்டு இறந்ததைத்தான் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

தான் இன்றுவரை சுயநலத்துடன் வாழ்ந்துவிட்டதை பவானி உணர்ந்தாள். அவளுடைய நோக்கு மக்கள் மீது திரும்பியது.

பவானி நிறஞ்சனவைச் சந்தித்தாள். தனது திட்டமொன்றை நிறஞ்சனவுக்குச் சொன்னாள். அவளும் பவானியின் கருத்தை ஏற்றுக் கொண்டாள்.

போரில் பாதிப்புற்று அங்கயீனர்களாக, அகதிகளாக, பராமரிப்பற்றவர்களாக உள்ள அனைவரையும் சேர்த்து ஓர் இல்லம் அமைத்து அதில் அவர்கட்கு சேவை செய்யும் பெரிய பொறுப்பை பவானியும், நிறஞ்சனவும் ஏற்றுக் கொண்டார்கள்.

எந்த மக்கள் அவர்களை ஒதுக்கி வைத்தார்களோ அந்தமக்களுக்கே அவர்கள் சேவை செய்தார்கள். தம்மைப் போன்ற பாதிப்படைந்த பெண்களையும் அந்த நிலையத்தில் சேவை செய்யத் துணை சேர்த்தனர்.

அவர்களுக்கும் தம்மைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் இருக்கவில்லை. நாம் என்றும் ஒரு இலட்சியத்திற்காக வாழ்வோம் என்றார்கள்.

'கற்பு என்பது உள்ளமடி, நம் கர்ப்பப் பையில் இல்லையடி' என்பதையும் அவர்கள் அடிக்கடி நினைத்துக் கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




13.03.89 (தெ.நி.செ.பி)
கரவெட்டியில் வள்ளியசிங்கம் யோகமலர் என்பவரும், சாம்பல்தீவில் பார்னெஸ் என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினரும் கொல்லப்பட்டார்கள்.

பருத்தித்துறையில் புலேந்திரன் என்ற புலி உறுப்பினர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

14.03.89 ( " )
காரை நகரில் செபமாலை செபஸ்தியாம்பிள்ளை என்பவரும், ஊரியாலையில் நவரட்ணம் நவநீதன் என்பவரும், ஏற்கெனவே கைது செய்யப்பட்டு வைத்திருந்த மனோகரன் என்பவரும் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

15.03.89 ( " )
பருத்தித்துறையில் மனோகரன் என்பவர் கொல்லப்பட்டார்.

16.03.89 ( " )
யாழ்ப்பாணத்தில் அகிலேஸ்வரன் என்பவர் கொல்லப்பட்டார்.

17.03.89 ( " )
மட்டுவிலில் புலிகள் இந்திய இராணுவத்திற்கிடையிலான மோதலில் சிவானந்த ராசா என்பவர் கொல்லப்பட்டார்.

18.03.89 ( " )
யாழ்ப்பாணத்தில் ரவீந்திரன் என்பவர் கொல்லப்பட்டார்.

19.03.89 ( " )
புலோலியில் 3 இளைஞர்கள் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குடத்தனையில் விஸ்வம், ரவீந்திரன், ஞானச்சந்திரன் ஆகியோரும் தண்ணியூற்றில் திருநாவுக்கரசு என்பவரும் கொல்லப்பட்டார்கள்.

21.03.89 ( " )
கட்டுவன், ஏழாலைப் பகுதியில் இந்திய இராணுவத்தால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

22.03.89 ( " )
புங்கங்குளத்தில் ரமேஸ்வரன் என்பவரும், கிளிநொச்சியில் சிவகுமார் என்பவரும் கொல்லப்பட்டார்கள்.

www.tamilarangam.net

23.03.89 (தெ.நி.செ.பி)
வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தால் வி.மயில்வாகனம் என்பவர் கொல்லப்பட்டார்.

24.03.89 ( " )
அரியாலையில் விஜயானந்தன் என்பவர் இந்திய இராணுவத்தால் கொல்லப் பட்டார்.

நல்லூரில் தனபாலசிங்கம் என்பவர் கொல்லப்பட்டார்.இவரது மகன் புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் 16 மாதங்களாக இந்திய இராணு வமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

25.03.89 ( " )
காரைநகர் கடற்பகுதியில் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மோச மாகத் தாக்கப்பட்டனர்.

ஆனைக்கோட்டையில் முகுந்தன் என்பவரும், வேறு இருவரும், சம்மாந்துறையில் அலி அப்துல் என்பவரும் கொல்லப்பட்டனர்.

26.03.89 ( " )
அரியாலையில் அருள்சானி பத்மசுந்தரம் என்பவரும் யாழ்ப்பாணத்தில் பார்த் திபன் என்பவரும் கொல்லப்பட்டார்கள்.

28.03.89 ( " )
யாழ்ப்பாணத்தில் பிரான்சிஸ், சந்திரபோஸ், ஜேசுதாஸ், ரவி ஆகியோரும், தெல்லிப் பளையில் பூபாலசிங்கம் என்பவரும், உடுப்பிட்டியில் ஒரு முதியவரும், நாகர்கோ விலில் ஒருவரும் கொல்லப்பட்டார்கள்.

29.03.89 ( " )
கோண்டாவிலில் செல்வரஞ்சன் என்பவர் கொல்லப்பட்டார்.

12.03.89 ( " )
சதாசகாயம் என்ற மன்னார் ஈரோஸ் நிர்வாகியும், சுந்தரராஜன் செல்வராஜ் என்ற ஈரோஸ் உறுப்பினரும் மன்னாரில் பயணிகள் பஸ் ஒன்றிலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். பின்னர் இவர்களின் சடலங்கள் உயிலங்குளம் இராணுவ முகா மருகே காணப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட 'ஒப் பறேசன் பாஸ்' நடவடிக்கையில் 300க்குமேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஆயிரத்திற்குமதிகமானோர் அந்தப் பிரதேசத்தைவிட்டு வெளியேறி யுள்ளனர். வீடுகளும், குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

01.04.89 (ஐலண்ட்)
அண்மையில் டிக்வெல, எப்பாவெல பகுதிகளில் நடைபெற்ற கொலைச் சம்பவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்களுக்கு கறுப்புப் பூனைகள், பச்சைப் புலிகள், பிரா, மஞ்சள் பூனைகள், தேசாபிமானிகள், கறுப்பு வண்டுத்திப் பூச்சிகள் ஆகிய இயக்கங்கள் உரிமை கோரியுள்ளன.

24.03.89 (வீரகேசரி)
'வட மத்திய மாகாணத்தில், குறிப்பாக எப்பாவெலயில் 17 பொதுமக்கள்கொல்லப்பட்டுள்ளனர். இவற்றுக்கு கரும்பூனைகள் என்ற குழுவே காரணம். இராணுவத்தினராலும், பொலிசாராலும் கைதுசெய்யப்பட்ட பலரின் சடலங்கள் ஆங்காங்கே போடப்பட்டுள்ளன.' - சிறிமா

கொக்கட்டிச்சோலை புதுமண்டபத்தடியைச் சேர்ந்த பாபு என்ற மாணவர் கடத்திச் செல்லப்பட்டு கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தயா இந்திய இராணுவத்தினரின்தேடுதல் வேட்டையின்போது சயனேட் அருந்தி மரணமானார்.

அரியாலையில் சிவகுரு கயிலேஸ்வரன் என்பவர் கொல்லப்பட்டார்.

23.03.89 (தெ.நி.செ.பி)
அக்கரைப்பற்றில் பொன்னையா ருத்ரமூர்த்தி என்ற 6 பிள்ளைகளின் தந்தைஇந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தின்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் இந்திய இராணுவத்துடன் நின்றிருந்தனர்.

30.03.89 ( " )
சுளிபுரத்தில் என்.சுந்தரம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

31.03.89 ( " )
மட்டக்களப்பில் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவரான வணசிங்க என்பவரும், கல்வியங்காட்டில் எஸ்.தாமோதரன் என்பவரும் கொல்லப்பட்டார்கள்.

01.04.89 ( " )
வல்வெட்டித்துறைப் பொலிகண்டிப் பகுதியில் இந்திய இராணுவம் திடீர் தேடுதல் வேட்டை நடாத்தி பல இளைஞர்களைக் கைது செய்தது. அரசர்கேணி, செந்தில் நகர் பகுதிகளில் இந்திய இராணுவம் செல் தாக்குதல் நடாத்தியது.

01.04.89 (திசை)
'மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தமிழ்ப் பகுதிகளில் இப்போதும் நடைபெற்று வருகிறது. முல்லைத்தீவு அனர்த்தங்கள் காரணமாக 114 வீடுகள் எரிக்கப்பட்டு, 1200 குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. இந்திய இராணுவம் வந்தவுடன் அமைதி கிடைக்குமென நம்பிய தமிழ் மக்களின் அபிலாசைகள் அவர்களாலேயே சிதறடிக்கப்பட்டுள்ள நிலைமை கவலைக்குரியதே' - வட, கிழ, மாகாணசபை ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர்.

www.tamilarangam.net

03.04.89 (ஈதெ.நி.செ.பி)
மிருசுவில், உசன் பகுதிகளில் இந்திய இராணுவத்தின் தேடுதல் வேட்டையின் போது பலர் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

04.04.89 ( " )
கள்ளப்பாடுவில் என்.நாகேஸ்வரன், வி.சுப்பிரமணியம் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

04.04.89 (வீரகேசரி)
எல்கடுவ,குளிரெட்டி தோட்டத்திலுள்ள இரு லயன்களைச் சேர்ந்த 5 காம்பறுக்கள் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

உப்புவெளி 3ஆம் கட்டையில் ஆர்.சிவலிங்கம் என்பவரின் சடலம் அழுகியநிலையில் மீட்கப்பட்டுள்ளது.

05.04.89 (வீரகேசரி)
'இந்தியப் படையை நாம் வெளியேறக் கோரவில்லை. அவர்கள் முகாம்களுக்குள்ளேயே இருக்க வேண்டும்' ஈரோஸ் பாலகுமார்

'கடந்த 40 வருடங்களாக தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பாகுபாட்டைக் காட்டிவந்தன. தமிழ் மக்களை நாம் மனிதர்களாக நடத்தாத காரணத்தினால்தான் இன்றைய பாரதூரமான நிலை ஏற்பட்டது' - பாராளுமன்றத்தில் வெளியுறவு பாதுகாப்பமைச்சர்.

பளைப்பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டபோது சாவகச்சேரியைச் சேர்ந்த கோணேஸ்வரன் சயனைட் அருந்தி மரணமானார்.

05.04.89 (தெ.நி.செ.பி)
யாழ்ப்பாணத்தில் கனகசிங்கம் என்பவரும், இணுவிலில் பரமநாதன் என்பவரும் கொல்லப்பட்டனர்.

06.04.89 (தெ.நி.செ.பி)
ஒட்டிசுட்டான், மாங்குளம் பகுதியில் இந்திய இராணுவம் கெலிக்கொப்ரரிலிருந்து தாக்குதல் நடாத்தியதில் சுமார் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

07.04.89 ( " )
தெல்லிப்பளையில் யாழ் உதவி அரசாங்க அதிபர் இராமநாதன், யாழ்ப்பாணத்தில் பாலகிருஉக்ஷ்ணன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

07.04.89 (வீரகேசரி)
'இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அண்மையில் வெளியான தகவல்களின்படி அநுராதபுரம் சிங்களவர் கொலையில் இந்திய அரசு நேரடியாகப் பங்குபற்றியதாகத் தெரிகிறது' - பாராளுமன்றத்தில் சிறிபால டி சில்வா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வவுனியா பெரிய நம்பலே பிரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டிடம் விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. கட்டிடம் முற்றாக எரிந்துள்ளது.

08.04.89 (வீரகேசரி)
யாழ்ப்பாணத்தில் வி.பரமேஸ்வரன் என்பவர் கொல்லப்பட்டார்.

08.04.89 (தெ.நி.செ.பி)
ஆர்.மகேந்திரன் என்பவரும், இந்திய இராணுவத்தால் சுட்டுக் காயப்படுத்தப் பட்டு யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த கணேசன் என்பவரும் கொல்லப்பட்டனர்.

10.04.89 ( " )
திருநெல்வேலியில் கலைஞானசிங்கம் என்பவரும், கோண்டாவிலில் சுரேஊ் என்ப வரும், வாழைச்சேனையில் பிரஜைகள் குழுத் தலைவரான பொன்னையா முத்து என்பவரும் கொல்லப்பட்டார்கள்.

11.04.89 ( " )
கிண்ணியாவில் 5 முஸ்லீம்கள் கொல்லப்பட்டதையடுத்து ஆயிரக்கணக்கான முஸ்லீ ம்கள் பாதுகாப்புக் கோரி பொலிஸ்நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். தமி ழ்ச்சிறுவனொருவன் 9.4.89இல் கொல்லப்பட்டதையடுத்து 10.4.89 இல் 2 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.

12.04.89 ( " )
யாழ்ப்பாணத்தில் சர்வோதய ஊழியர் இம்மனுவேல் என்பவரும், ரவிச்சந்திரன் என்ற மாணவரும், சாவகச்சேரியில் விக்னேஸ்வராக் கல்லூரி அதிபரும், கரவெ ட்டியில் விஜயா என்பவரும், வரணியில் குலசிங்கம் சிவா என்பவரும் கொல்லப் பட்டார்கள்.

புத்தூர் நீர்வேலியில் 4 இளைஞர்கள் இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப் பட்டனர்.

13.04.89 (வீரகேசரி)

"வன்னிப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட எல்லைப்புறத்தில் 'வெலிஓயா' என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் அந்த மாவட்டத்தின் எல்லைகள் என்ன?" அமிர்தலிங்கம்

"இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து வன்முறை, சதிநாசச் செயல்களில் ஈடுபட்டுள்ளோருக்கான வேண்டுகோள் என்ற தலைப்பில் அரசாங் கம் விடுத்த விளம்பர அறிக்கையில், வட மாகாணத்தின் கீழ் வெலிஓயா மாவட் டம் என்ற ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு இப்படி விசமத்தனமான காரியங்களில் ஈடுபடுவது தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்துவதாகும்.
— வரதராஜப்பெருமாள்.

www.tamilarangam.net

"இந்திய—இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு 18 மாதங்களில் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் துண்டாக்கப்பட்டுவிட்டன. போகவெல சந்தியில் புதிய சிறி லங்கா இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் தீவிரமாகச் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. திருகோணமலை மாவட்டத்திலிருந்து கந்தளாயைப் பிரிக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமான மணலாறு என்னும் பகுதிக்கு வெலிஓயா என்னும் புதிய பெயர் சூட்டப்பட்டு ஏறத்தாழ 14,000 தமிழ்க்குடும்பங்கள் நிர்ப்பந்தமாக இடம்பெயரப்பட்டு இச் சிங்களக் குடியேற்றம் தொடர்கின்றது" — தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கையிலிருந்து.

13.04.89 (தெ.நி.செ.பி)
பருத்தித்துறையில் எஸ்.பாபு, இளைப்பாறிய அதிபர் பாலசிங்கம், ஆசிரியர்களை சமூர்த்தி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

14.03.89 ( " )
நல்லூரில் எஸ்.ரி.சந்திரகுமார் என்பவர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

14.04.89 (வீரகேசரி)
திருகோணமலை மணிக்கூண்டுக் கோபுரத்திற்குச் சமீபமாக உள்ள சென்றல்றோட் சந்தைக் கட்டிடப் பகுதியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 34பேர் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் காணப்பட்ட தமிழர்கள் வாள், கத்தி வெட்டுக்கு இலக்காகினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். 7பேர் காயமடைந்தனர்.

ஒரு பெண் தொழிலாளி தான் வசிக்கும் லயக் காம்பறாவில் குழந்தை பெற்ற குற்றத்திற்காக அவரது கொடுப்பனவிலிருந்து 200 ரூபா கழிக்கப்பட்ட சம்பவம் இறக்குவானை பாலம் கோட்டா தோட்டத்தில் நடைபெற்றுள்ளது.

ராசாவின் தோட்டம் வீதியில் பண்டைத்தரிப்பைச் சேர்ந்த விக்ரர் என்பவரும் வேறொருவரும் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்நகரில் வான் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் சுமார் 8வீடுகள் தரைமட்டமாகின. வீடுகள் இடிந்ததால் கனகரத்தினம் முருகரத்தினம், வில்சன் அரியதுரை, சச்சிதானந்தன் தயாபரன் ஆகியோருடன் இன்னும் ஒருவர்கொல்லப்பட்டார். 17பேர் காயமடைந்தனர்.

17.04.89 (வீரகேசரி)
'நீங்கள் பகிரங்கமாக எங்களைச் சந்திக்க விடுத்த வேண்டுகோளை நாம்ஏற்றுக் கொள்கிறோம். இச் சந்திப்புக்கான ஒழுங்குகளை நீங்கள் செய்வீர்களாக' என விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவு பிரேமதாசவுக்கு தமது பிரதிநிதி மூலமாகக் கடிதம் அனுப்பியிருந்தது. 'சிறிலங்காவிலுள்ள எந்த ஒரு இடத்திலாவது பேச்சு வார்த்தையை நடத்துவதற்கு வேண்டிய அவசியமான ஒழுங்குகளை மேற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வதற்கு வசதியாக உங்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை நியமியுங்கள்' என பிரேமதாச புலிகளின் அரசியல் ஆலோசகருக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

திருமலை குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின் 29 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்.

18.04.89 (வீரகேசரி)
திருகோணமலை குண்டுவெடிப்பில் இறந்தவர் தொகை 46ஆக உயர்ந்துள்ளது. இவர்களுள் 27பேர் சிங்களவர், 12பேர் தமிழர்.

உடப்புசல்லவ தொளஸ் தோட்டத்தில் ஊர்க்காவல் படையினர் தொழிலாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்கினர். இதனைக் கண்டித்து சுமார் 2,000தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

மட்டக்களப்பில் புலேந்திரன் என்பவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொச்சிக்கடையில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பெர்னண்டோ ஆனந்தன் என்பவர் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஜேம்ஸ் மரியநாயகம் என்பவரது சடலம்காணப்பட்டது.

மீசாலை விக்னேஸ்வராக் கல்லூரி அதிபரான கந்தையா செல்லத்துரை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

19.04.89 (வீரகேசரி)
கைதடி அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் விஜயேந்திரன் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

'மக்களின் ஜனநாயக உரிமைகளை மழுங்கடிக்கும் அரசின் உண்மைநிலை இன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசினால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தத்தின்போது 25 மாணவர்கள் காணாமல் போயுள்ளனர். வடக்கிலும், கிழக்கிலும் அப்பாவித் தமிழ் சிங்கள மக்களே கொல்லப்படுகிறார்கள்.' – மனித உரிமைகள் பாதுகாப்பு மாணவர் அமைப்பு.


20.04.89 (வீரகேசரி)
மட்டக்களப்பில் ஒரு மாதத்திற்கு முன்னர் காணாமல்போன பத்மானந்தன் என்பவர் பிணமாக மீட்கப்பட்டார்.

22.04.89 (வீரகேசரி)
திருகோணமலையில் பாலாஜி, செந்தில் என்ற இரு உறுப்பினர்கள் இந்திய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக ஈரோஸ் அறிவித்துள்ளது.

www.tamilarangam.net



# நூல் அறிமுகம்



ஆசிரியர்: ஆசிரியர் குழு

முகவரி: PUTHUMAI
Mainzer Landstr 147
6000 Frankfurt 11

விலை: 16,- டி.எம் (ஒரு வருடச் சந்தா)

* 1988 சித்திரை மாதத்திலிருந்து காலாண்டிதழாக வெளிவருகிறது.
* அரசியல், பொருளாதார, கலாச்சார இதழ்
* ஆசிரியர் தலையங்கம், கட்டுரைகள், கவிதைகள், பேட்டி, சிறுகதை, கருத்துப் படங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

கலம் பதினாறில் வெளியான நமது விமர்சனம் என்கிற பகுதியில் இலக்கியச் சந்திப்பைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டவற்றில் பெரும்பாலானவை அச் சந்திப்பில் கலந்துகொண்டவன் என்ற முறையிலும், தூண்டிலின் வாசகன் என்ற ரீதியிலும் எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியுள்ளது. சிறப்பான அம்சங்களை ஒதுக்கிவிட்டு உங்கள் பார்வையை 'பாதகமாகக்' கொண்டுள்ளது வேடிக்கையானதே. மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்கிற ஒருவரின் கோரிக்கையை மற்றவர்கள் பொருட்படுத்தாதபோதிலும், சுய அறிமுகத்தின்போது ஒருவர் தன்னைப் பற்றி எதுவும் தெரிவிக்காத போதும் சந்திப்புக்கு வந்துகொண்டிருந்த கடலோடிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இதேபோல் அடுத்தடுத்த விடயங்களில் நீங்கள் மௌனம் சாதித்திருந்ததை நமது விமர்சனத்தில் ஏன் சுய விமர்சனம் செய்யவில்லை. திரு. குமாரசாமி பேனையைத் தூக்கி எறிந்ததையோ, திரு. பாரதிதாசன் கொப்பியைத் தூக்கி எறிந்ததையோ மற்றவர்கள் காணாதபோது, அதைக் கண்ட கடலோடிகள் ஏன் இலக்கியச் சந்திப்பின் தலைமைக்குழுவின் கவனத்திற்கு அன்றைக்கே கொண்டுவரவில்லை? அவர்கள் பேனையை மேசையில் தூக்கி வைத்ததையும், கொப்பியைத் தூக்கி வைத்ததும் மற்றவர்கள் சாதாரண நிகழ்வாக எடுத்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் அவற்றை விமர்சனத்துடன் ஒப்பிட்டு விமர்சனத்தைக் கொச்சைப்படுத்தி விட்டிருக்கிறீர்கள்.

இரண்டாவது இலக்கியச் சந்திப்பு நிகழ்ந்தபின் தூண்டிலின் பன்னிரண்டாவது கலத்தில் அதைப் பற்றி எழுதும்போது 'மூன்றாவது இலக்கியச் சந்திப்பு காத்திரமாக அமையலாம் என்கிற எதிர்பார்ப்பையும், 'பலர்' தூர இடங்களிலிருந்து வந்து கலந்துகொண்டது பலரின் ஆர்வத்தையும், அக்கறையையும் காட்டுகிறது' எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் மூன்றாவது இலக்கியச் சந்திப்பில் பலர் தூர இடங்களிலும், வெளிநாடுகளிலுமிருந்து வந்து கலந்து கொண்டதும், பெண் விடுதலை, மலையக மக்கள், புத்தக வெளியீட்டு நிகழ்வுக்கோத்திரவிடயங்களுடன் சேரனின் கவிதாஞ்சலியும் இடம் பெற்றது. இப்படிக் காத்திரமான விடயங்களைப் புறக்கணித்துவிட்டு, ஆட்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக் கூடியது என்றும், இது இலக்கியச் சந்திப்பை அர்த்தமற்றதாக்கிவிடும் என்றும் நீங்கள் தவறாக நினைத்துள்ளமை கவலைக்குரியதே. வீடியோ நிகழ்ச்சி சம்பந்தமாக சந்திப்பில் உணர்ச்சிவசப்பட்ட கடலோடிகள் இருவரை (சுய) விமர்சனம் செய்யாது மற்றவர்களை எல்

www.tamilarangam.net

லாம் விமர்சனம் செய்துவிட்டு, இறுதியில் இவை நமது சுய விமர்சனம் என்று எழுதியுள்ளீர்கள். ஒருவரைப் பற்றி அவரே செய்வதுதான் சுய விமர்சனம். இது கடலோடிகளுக்குப் புரியாமலிருப்பது எம்போன்ற வாசகர்களுக்கு கவலை தருகின்றது.

கெர்லிங்கன்

ஜெமினி

சிறப்பான அம்சங்கள் என்று நீங்கள் குறிப்பிட்டவை 'இலக்கியச்சந்திப்பு' என்ற தலைப்புக்குக் கீழான தொகுப்புக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. எனவே இதையே மீண்டும் நமது விமர்சனத்தில் மறுபிரசுரம் செய்யாது, இப்படியான சில சிறப்பம்சங்கள், சில நடவடிக்கைகளினால் இனிவரும் இலக்கியச் சந்திப்புகளில் இல்லாமல் போய்விடக் கூடாதென்பதே நமது விமர்சனத்தின் பார்வையாக இருந்தது. மௌனஅஞ்சலி, சுய அறிமுகம், பேனை, கொப்பி 'தூக்கி வைத்த' சம்பவங்களின் போது எமது கருத்தை உடன் தெரிவிக்காமலும், இவை பற்றி சந்திப்பின் செயற்குழுவிடம் தெரியப்படுத்தாததாலும் அந்தத் தவறுகளில் நாங்களும் பங்காளிகளே. இதனால்தான் தவறுகளைக் குறிப்பிட்டுவிட்டு இவை நமது சுயவிமர்சனமுமாகும் எனக் குறிப்பிட்டோம். இவற்றை விமர்சித்தன் நோக்கம் இப்படியான இரண்டு செயல்கள் இனி நாலாகி, எட்டாகிப் பின்னர் அவையே சுபாவமாகப் போய்விடக் கூடாதென்பதற்காகவே தவிர கொச்சைப்படுத்துவதற்காகவல்ல. கலந்துகொண்ட அனைவரினதும் எண்ணிக்கையை அல்ல, வாசகர்களின் எண்ணிக்கையைத்தான் குறிப்பிட்டோம். வீடியோ நிகழ்ச்சி சம்பந்தமாக கடலோடிகளில் இருவர் 'உணர்ச்சிவசப்பட்டதைக்' குறிப்பிட மறந்ததும் எமது தவறேயாகும்.

— கடலோடிகள்

கலம் பதினாறில் மூன்றும் இலக்கியச் சந்திப்புப் பற்றிய நமது விமர்சனம் பகுதியில் பல வாசகர்கள் பெயர் குறிப்பிட்டு நேர்மையாக விமர்சிக்கவில்லை, விமர்சனம் என்றால் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற வாசகங்களைக் கண்ணுற்றேன். இங்கே சஞ்சிகையாளர்கள் எல்லோருமே நேர்மையுடன் எழுதுகிறார்களா? அல்லது விமர்சிக்கின்றார்களா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது. அன்றைய தினம் ஆரம்பத்தில் வாசிக்கப்பட்ட அறிக்கையிலும் சரி, வெகுஜனம் ஆசிரியரின் விமர்சனத்திலும் சரி சில சஞ்சிகைகள் என்றே கூறப்பட்டது. அவ்வேளை அச் சஞ்சிகையின் பெயர்களைக் கூறும்படி யாருமே கேட்கவில்லை. ஆனால் நான் சில சஞ்சிகைகள் என்று விமர்சித்தபோது சஞ்சிகைகளின் பெயர்களைக் கூறும்படி சிலரால் வற்புறுத்தப்பட்டது அநாகரிகச் செயலாகும்.

தங்களது நமது விமர்சனம் பகுதியில் 'தங்கள் பலவீனங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைப் பலமாக்க முயற்சி செய்த சில இயக்கங்கள் வீடியோவில் தங்களை விளம்பரப்படுத்தி மக்களை ஏமாற்றியது போலவே..' என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் அந்த இயக்கங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதியிருக்கலாமே? உண்மையான இலக்கியங்களில் நேர்மையும், தூய்மையும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அரசியல் சகதியை அள்ளிப்பூசி வெளிவரும் இலக்கியங்களில் எப்படி நேர்மையை எதிர்பார்க்க முடியும்?

காகன் — ஆ. நாகலிங்கம்

சக இயக்கங்களை 'மிஞ்ச' வேண்டும் என்ற நோக்கில் எட்டிக்குப் போட்டியாக தமது இராணுவ பலங்களை வீடியோ மூலம் காட்டி நிதியையும், ஆதரவாளர்களையும் சேர்த்துக்கொள்ள முயற்சித்து, பாதை மாறியவை புலி, புளொட், ரெலோ என நாம் குறிப்பிட்டு எழுதாதது எமது தவறேயாகும்.

— கடலோடிகள்.

தூண்டிலின் தரம் தற்போது ஒரு நல்ல முற்போக்குச் சஞ்சிகைக்குரிய குணாம்சத்தை நோக்கிச் செல்வது வரவேற்கத்தக்கதும், அவசியமானதுமாகும். மேலும் அதன் தரத்தை உயர்த்துவதில் ஆசிரியர் குழு முயற்சிக்க வேண்டும்.

சுவிஸ் — கு. கனகேஸ்வரன்



தொடர்கின்ற பயணத்தில் என்ற கவிதையில் மலைமுகட்டின் மைந்தர்களே என விளித்திருப்பதைவிட மலைமுகட்டின் மைந்தர்களே தங்களைப் பற்றித் தெரிவிப்பதாக அமைந்திருந்தால் அந்நியத்தன்மை வெளிப்பட்டிருக்காது. நீங்கள், உங்கள் என்ற சொற்கள் நாங்கள், எங்கள் என்று மாற்றப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

புதிய பாதை என்ற சிறுகதையில் சாதாரண பேச்சு வழக்கு நடை தவிர்க்கப்படாமலிருந்திருந்தால் வாசகர்களை கதையுடன் நன்றாக இணைத்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியச் சந்திப்புப் பற்றிய இரண்டு வாசகர் கடிதங்கள் பிரசுரமாகியுள்ளன. இலக்கியச் சந்திப்பு என்பது விமர்சனத்திற்கு உட்படாத ஒரு நிகழ்வு என நாம் கருதவில்லை.

இரண்டாவது வாசகர் கடிதத்தில் 'ஆனால் அரசியல் சகதியை ...' என்று வாசகர் குறிப்பிட்டுள்ளார். அரசியலைச் சகதியாக்கி, அதிலிருந்து நேர்மையை விலக்கியவர்கள் அரசியல்வாதிகள். எனவே இந்த அரசியல் சகதியை எதிர்க்க வேண்டியது உண்மையான அரசியல் ஏடுகளின் பணியாகும். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள இலக்கியங்களும் நேர்மையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

தூண்டிலில் வரும் ஏனைய ஆக்கங்களைப் போலவே நமது விமர்சனமும்கூட உங்கள் விமர்சனத்திற்குட்பட்டதே.




கலைத்துறையில், குறிப்பாக சங்கீதத்தில் குரல் வளம் இருந்தும் பலர் அதைப் பயில்வதற்கு வசதியின்றி இருக்கிறார்கள். இந் நிலையை ஓரளவுக்கு செய்யும் பொருட்டும், பாடத்திட்டத்திற்கமைய பயிற்சியளிக்கும் நோக்குடனும் 'ஏழிசை வித்தியாலயம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

V.S.Selvarajah
Tiefesstr 17
4600 Dortmund 1 Tel:(0231)831863

மே மாதம் 5ஆம் திகதி முதல் எசன் நகரிலும், மே மாதம் 6ஆம் திகதி முதல் விற்றன் நகரிலும் எலக்ரோனிக் ஓர்கன் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. எம்.பி.கோணேஷினால் பயிற்றுவிக்கப்படும் இந்த வகுப்புகளில் பயில விரும்புவோர் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

எசன்: (0201) 596458 (மரியக்குமார்)
விற்றன்: (02302) 690219 (கருணா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இர. சிவலிங்கம் எம். ஏ.

# இலங்கை மலைநாட்டுத் தமிழர்

இலங்கையில் மலைநாடு என அழைக்கப்படும் பகுதி கடல் மட்டத்திலிருந்து 1500 அடி முதல் 6000 அடி வரைக்கும் உட்பட்ட மலை சூழ்ந்த பகுதியாகும். இலங்கையில் போர்த்துக்கீசியர் 1505ல் காலடி எடுத்து வைத்தபோது இந்நாட்டில் மூன்று தனியரசுகள் அமைந்திருந்தன. இவை கோட்டை அரசு, யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு என வழங்கப்பட்டு வந்தன. கண்டி அரசுக்குள் உட்பட்டிருந்த பெரும் பகுதி மலைநாடாகும். இயற்கை அரண் சூழ்ந்து காடு அடர்ந்த கண்டி அரசை அன்னிய நாட்டினர்களாகிய போர்த்துக்கீசியரும் ஒல்லாந்தரும் பொருளாதாரக் காரணங்களால் கைப்பற்றவில்லை. ஆனால் கண்டி அரசு அன்னியர்களை, இலங்கையைவிட்டு விரட்ட மாற்றாரோடு தொடர்பு கொண்டதை அறிந்து, அச்சத்தால் கண்டி அரசைக் கைப்பற்ற முயன்று, ஈற்றில் 1815ல் ஆங்கிலேயர்களால் கைப்பற்ற முடிந்தது.

அந்நிய ஆட்சிக்குட்பட்ட கண்டி பின்னர் பெருமாற்றமடைந்தது. கண்டி அரசுக்கும் இந்தியாவுக்கும் நெடும் பண்டைக்கால முதல் தொடர்பிருந்து வந்திருக்கிறது. சில அறிஞர்கள் இராவணனின் நகரம் மலைநாட்டில்தான் இருந்திருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். இன்று அப்புத்தளை என அழைக்கப்படும் சிறு நகரத்திற்கருகேயே இராவணனது தலைநகர் அமைந்திருக்க வேண்டுமென்பது சிலரது துணிபு. தெய்வந்துறை என்றொரு நகரம் இன்றும் இலங்கையின் தென்கோடியில் உண்டு. இது ஒரு பண்டைத் துறைமுகம் எனவும் இதன் வழியாகவே இராமர் இலங்கைக்கு வந்தார் எனக் கூறுவாருமுளர். இன்றும் மலைநாட்டின் அழகு நகரான நுவர-எலியாவுக்கு அணித்தாய் சீதையம்மன் கோயிலொன்றுள்ளது. அங்குள்ள பூங்காவிலேயே சீதை சிறை வைக்கப்பட்டதாகப் பரம்பரை ஐதீகம், அதற்குச் சான்றாய் இப்பகுதிகளிலே அசோக மலர்கள் பூத்துக் குலுங்கக் காணலாம். இப் பழங்கதைகளின் உண்மை எவ்வாறாயினும் வரலாற்றுக் காலத்தில், 18ம் நூற்றாண்டிலிருந்து இந்திய நாயக்க வம்ச மன்னர்கள் கண்டியில் அக்காலத்தில் தமிழிலக்கிய ஏடுகள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில் இப்போது மறைந்துபோன சின்னமுத்து காவியமும் ஒன்றாகும். கண்டியை, ஆங்கிலேயர் 1815ல் கைப்பற்றியபோது கண்டியின் பிரதானிகள் அனைவரும் கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அதில் சிலர் தமிழில் ஒப்பமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. முன்னாள் பிரதம மந்திரி திருமதி ஸ்றீமாவோ பண்டாரநாயக்காவின் மூதாதையரான ரத்வத்த திசாவ தனித் தமிழிலேயே கையொப்பமிட்டுள்ளார். இச் சிறுசிறு ஆதாரங்களைக் கொண்டு இந்தியாவிற்கும் கண்டிக்கும் இடையில் அந்நிய காலத்திற்கு முன்பிருந்தே நெருங்கிய தொடர்பிருந்ததென்பதை நிறுவலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"1833க்குப் பின்னர் ஆங்கிலேயர் மலைநாட்டுப் பகுதியில் கோப்பிப்பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். இச்செய்கை 1887ல் நலியத்தொடங்கியது. அதன் பின்னர் தேயிலைப் பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு பயிர்ச் செய்கைக்கும் ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அவர்களை ஆங்கிலேயர் குறைந்த செலவில் தென்னிந்தியாவிலிருந்து (புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி) அழைத்து வந்தனர். பல லட்சக் கணக்கான தமிழர்கள் 19ம் நூற்றுண்டில் இலங்கையின் கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களில் குடியேறினர்கள் இதனல் இலங்கையின் பொருளாதாரம் அடிப்படையில் மாற்றமடைந்தது. மலைநாட்டுத் தோட்டங்களே இந்நாட்டின் பொருளாதார அடித்தள மாய் அமைந்து, நாட்டின் மொத்த வருவாயில் 66 சத வீதம் உழைத்துக் கொடுத்தன.

இவ்வாறு குடியேறி நாட்டின் முதுகெலும்பாக அமைந்த தொழிலாளர்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசாங்கம் ஓர் அரசாங்கப் பிரதிநிதியை நியமித்தது. இதைத் தவிர்த்து ஒவ்வொரு தோட்டத்திலும் பெரிய கங்காணிமார்களே தொழிலாளர்களுக்குச் சகல பொறுப்புக்களும் வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். காலப்போக்கில் இப் பெரிய கங்காணிமார்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் சுயநலத்துக்காக உபயோகித்து மக்களையே சுரண்டத் தொடங்கிவிட்டனர். இதை உணர்ந்து அவர்களை எதிர்த்து, கெடுபிடிகளிலிருந்து மீள தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. காலஞ்சென்ற திரு. நடேச ஐயர் மலைநாட்டு மக்களை ஒரு இயக்கத்திற்குள் அமைத்து, அவர்களுக் காகப் போராடினுர். அரசாங்க சபையின் அங்கத்தவராக இருந்த போது இந்தியத் தொழிலாளர்களின் நன்மைக்காக அச்சபையில் உண்மையுடன் வாதாடினுர். அவரது முயற்சியினுல் பெரிய கங்காணி மார்களின் ஆதிக்கம் குன்றியது. மலையகத் தொழிலாளர்களும் தங்களின் சுயபலத்தை நம்பத் தொடங்கினுர்கள். திரு. நடேச ஐயரின் தொழிற்சங்க முயற்சிக்குப் பிறகு 1938ம் ஆண்டளவில் நேருவின் ஆலோசனையை ஒட்டி இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. இது மலையக மக்களின் ஏகோபித்த இயக்க மாகவும், மிகப் பெரிய தொழிற்சங்கமாகவும் வலுப்பெற்றது இலங்கை இந்தியக் காங்கிரசின் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்த 1944-48ம் ஆண்டுகளே மலைநாட்டுத் தமிழர்களின் வரலாற்றில் பொற்காலமெனலாம். இலங்கையின் முதலாவது சுதந்திரப் பாராளுமன்றத்தில் மலையகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக எழுவர் வீற்றிருந்தனர். இலங்கை இந்தியக் காங்கிரஸைத் தவிர, இடது சாரிக் கட்சிகளும் மலைநாட்டுத் தொழிலாளர்களின் வளர்ச் சியில் வர்க்க ரீதியில் நாட்டம் கொண்டிருந்தார்கள். ஆரம்ப காலத்தில் இலங்கை இந்தியக் காங்கிரசும் இடதுசாரிக் கட்சி களோடு தொடர்பு பூண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையகத் தொழிலாளர்களின் வீழ்ச்சி 1948, 49ம் ஆண்டில் ஆரம்பமாகி, அன்று முதல் இன்று வரை படிப்படியாக அதிகரித்துக் கொண்டே போகிறது. சிறீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தத்தோடு மலையகத் தொழிலாளர் மிகத் தாழ்ந்த நிலையை எய்திவிட்டனர். மலையகத் தொழிலாளர்களின் இடதுசாரிப் போக்கைக் கண்டு மிரண்ட அரசாங்கம் வர்க்க பேதங்களை அடிப்படையாகக் கொண்டு இனத்துவேஷத்தை மூட்டி மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. மலையகத் தொழிலாளர் அவர்களின் வாக்குரிமையைப் பறிக்கக் கொண்டு வரப்பட்ட சட்டத்தை எதிர்த்துப் போராடும் திறனற்றவர்களாக இருந்துவிட்டார்கள். அவர்களின் தலைமை அவர்களைத் தவறான வழியில் நடாத்திச் சென்றதே இதற்குக் காரணமாகும். வாக்குரிமைப் பறிப்பு சட்டத்தை, ஆரம்பத்தில் தலைமை எதிர்த்து உண்ணாவிரதமிருந்தது. பின்னர் எக்காரணத்தினாலோ அதனை ஏற்று எட்டுலட்சம் மக்களின் குடியுரிமையை அன்று பறிகொடுத்தது. தங்களின் குடியுரிமைக்காக மலை நாட்டுத் தொழிலாளர்கள் இன்று வரை ஒரு போராட்டமும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

1949க்குப் பிறகு மலைநாட்டில் தொழிற்சங்கங்கள் பெருக ஆரம்பித்தன. இலட்சியங்களை இழந்து கொண்டிருந்த இலங்கை இந்தியக் காங்கிரஸ் தன்னம்பிக்கையற்ற இயக்கமாகத் தவிக்கத் தொடங்கியது. பல சிங்கள மக்கள் அதனை ஓர் அந்நிய நாட்டு நிறுவனம் என்று எதிர்ப்புக் கிளப்பினர். இந்த எதிர்ப்புக்கஞ்சிய இலங்கை இந்தியக் காங்கிரஸ் தனது பெயரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என மாற்றிக் கொண்டது. நாட் செல்லச் செல்ல அதன் தலைவர்களுக்கிடையே பதவிப் போட்டிப் பூசல் காரணமாக இயக்கம் பிளவு கண்டு, இரண்டு, மூன்று பின்னர் நான்காகவே பிரிந்து தனித்தனி இயக்கமாக மாற தொடங்கியது.

புதுப்புது தொழிற் சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்தும், அது தோட்டத் தொழிலாளருக்குத் தகுந்த பாதுகாப்பாக அமையவில்லை. ஆரம்பகாலத்தில் பெரிய கங்காணிமார்களுக்கு இருந்த அதிகாரமும் இப்போது துரைமாருக்குத்தான். ஒரு கிராமத்தில் உள்ளதைப்போல சுயாட்சி அமைப்பு எதுவுமே தோட்டத்திலில்லை தோட்டத்தில் போலீஸ் நிலையம் இல்லை. தோட்டமக்களுக்கென ஒரு சமுதாய அமைப்பு கிடையாது. அடிமைகளைப் போன்ற உரிமையற்ற வாழ்வுதான் அவர்களுக்கு உண்டு. மலைநாட்டில் வசிக்கின்ற லட்சக்கணக்கான மக்களுக்கு ஓர் அங்குல நிலமேனும் உரிமையில்லை. வசிப்பதற்கு தோட்ட லயங்களைத் தவிர வேறு வீடுகளில்லை. தோட்டத்தை விட்டு நீக்கப்பட்டால் எங்கு செல்வது என்ன செய்வது என்று தெரியாது தடுமாறுகிறார்கள். 55-60 வயதடைந்ததும், அவர்கள் வேலையினின்றும் நீக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்திமகால சகாயப் பணமாக ஒரு சிறு தொகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்கப்படுகிறது ஆகக்கூடியது 30 வருடகாலம் ஒரு தோட்டத்தில் தொழில் புரிந்திருந்தால் ஆணுக்கு ரூ. 900. பெண்ணுக்கு ரூ. 750. இத்தொகையை இரண்டாண்டுக்குள் செலவு செய்துவிட்டுப் பெரும்பாலோர் தெருவில் பிச்சைக்காரர்களாய்த் திரிகிறார்கள். தோட்டங்களில் இன்று வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது. அதற்கு தேயிலை விலை வீழ்ச்சியும் ஒரு காரணமாகும். 20–25 வயதடைந்த, தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கூட வேலை கிடைப்பதில்லை. மாற்று வழி தேடி அலைகிறார்கள். குடியுரிமை அற்றதால் தேயிலைத் தோட்ட வேலையைத் தவிர வேறு வேலைகள் கிடைப்பதே இல்லை எனவே மிகவும் சொற்பக் கூலி கொடுத்து இலங்கையர்கள் இவர்களின் தொழிலைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வேலை வாய்ப்பற்ற காரணத்தால் பல இளம் பெண்கள் நகரங்களில் உடலை விற்று ஜீவிக்கிறார்கள் என்ற நிலையை அறிய வேதனைக்குள்ளாக வேண்டியுள்ளது. இத்தகைய ஒரு தன்மானமற்ற, தற்பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழ்வதால் எத்தகைய அநீதிகளையும் சகித்துக் கொள்ளும் இனமாக மலைநாட்டுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

ஒரே தோட்டத்தில் பல தொழிற்சங்கங்கள் தங்களுக்குள்ளே தொழிலாளர்களைப் பகிர்ந்து கொண்டிருப்பதால், தோட்டங்களில் தொழிற்சங்கப் போட்டியும் பகைமையும் வளர்ந்து, தொழிலாளர்களுக்குப் பெருந்துன்பங்களேற்பட்டுள்ளன. அவர்களின் ஐக்கிய சக்தி சிதைந்தது மட்டுமல்லாமல், அவர்களுக்குள்ளேயே போட்டியும் பகைமையும் வளர்ந்து விட்டதால் அடிப்படைப் பிரச்னைகளை மறந்துவிடுகிறார்கள். தொழிற் சங்கப் போட்டியினால் ஏற்பட்ட கலவரங்களில் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். 1966ல் சம்பள உயர்வு கோரி ஒரு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு நியாயமான போராட்டம். இலங்கையில் இன்று அதிகநேர உழைப்புக்குக் குறைந்த சம்பளம் பெறுபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் தான். சில தொழிற்சங்கங்கள் ஒத்துழைக்காததனால் 46 நாட்களாக நடைபெற்ற போராட்டம் தோல்வியில் முடிவடைந்தது. எனவே தொழிற் சங்கப் பிளவுகளினால், தமது ஒரே ஒரு ஆயுதமான வேலை நிறுத்தத்தையும் மழுங்கவைத்து விட்டு, ஒரு விரக்தி நிலையில் மலையக மக்கள் வாழ்கின்றனர்.

மலைநாட்டுத் தொழிலாளர்கள் நாடற்ற மக்களாய்க் கருதப்பட்டு பல ஆண்டுகளாக உரிமையற்றவர்களாக இந்நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். மலைநாட்டின் தொழிலாளர்களுக்கும், நாட்டின் பிற தொழிலாளர்களுக்கும் இடையே உறவோ நட்போ வளர்ச்சியடையவில்லை. சிங்கள மக்களுக்கும் மலைநாட்டுத் தமிழர்களுக்குமிடையேயும் உறவு வளரவில்லை இதனால் மலையகத் தமிழ் மக்கள் அந்நியர்களாகவே கருதப்பட்டு வருகிறார்கள். இலங்கையின் உற்பத்தியின் 66 சத வீதத்தை உழைத்துத் தருபவர்கள் என்ற உண்மை உதாசீனப்படுத்தப்படுகிறது. 1956க்குப்பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் தொழிலாளர்களுக்குப் புதிய சலுகைகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசதிகளும் கிட்டின. இவைகள் வாக்குரிமை அற்ற மலைநாட்டுத் தமிழருக்குக் கிட்டாது போயின. இந்தியாவின் பிரதமராக நேரு இருந்த வரையில் இம்மலைநாட்டு மக்களைக் கட்டாயமாக நாடு கடத்தப்படுவதை எதிர்த்து வந்தார். இதனால் மலையக மக்களின் அரசியல் அந்தஸ்து தீராத பிரச்னையாகவே இருந்து வந்தது. மலையகத் தொழிலாளர்கள் நம்பியிருந்த பெருந் தொழிற்சங்கங்கள் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இதை மலையகத் தொழிலாளர் அறியாமற் போனது பெருந்துரதிஷ்டமாகும். இறுதியாக 1964ல் மலையக மக்களின் வரலாற்றில் மாபெரும் இருள் சூழ்ந்தது. அவ்வாண்டின் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையின்படி 15 வருட கால எல்லைக்குள் $5\frac{1}{4}$ லட்சம் மலையக மக்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு (அகதிகளாக) நாடு கடத்தப்படவேண்டும். நூற்றாண்டுக் காலமாய்க் குறைந்த ஊதியம் பெற்று உழைத்து வளம் பெருக்கிய மலைநாட்டுத் தொழிலாளியை எவ்வகை நீதியும் நேர்மையுமின்றி நாடு கடத்தப்படுவதற்காகச் செய்து கொண்ட ஒப்பந்தம் உலக வரலாற்றிலேயே தொழிலாளர் வர்க்கத்திற்கு செய்த மாபெரும் துரோகமாகும். இதை அமுல் நடத்துவதற்கான சட்டமும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இச்சட்டத்தின் படி 15 வருட கால எல்லைக்குள் $5\frac{1}{4}$ லட்சம் மலையகத் தமிழர்கள் இந்தியக் குடியுரிமையை ஏற்றுக்கொண்டால் 3 லட்சம் மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படுமாம் இன்னும் மீதியுள்ள $1\frac{1}{2}$ லட்சம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் படாமல் விடவும் செய்துள்ளனர்.

அரசியல் சூதாட்டத்தினால், மலையகத்தொழிற் சங்கங்கள் இந்த அநியாய முடிவை ஏற்றுக்கொண்டுள்ளன. எதிர்த்துப் போராட எந்தத் தொழிற் சங்கமும் முன்வரவில்லை. மலையகத் தொழிலாளர் இத்தொழிற் சங்கங்களின் பிடியில் சிக்கி அரசியல் பகடைக்காயாகச் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களது வேதனையும் விரக்தியும் குமுறும் எரிமலையாக மாறிக்கொண்டிருக்கின்றது. இந்த எரிமலை வெடிக்கும் பொழுது மலைநாட்டின் இருளை ஓர் ஒளிப்பிழம்பு அகற்றும் என நாம் எதிர் பார்க்கலாமல்லவா?

1969ம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவள்

— பார்த்திபன்

மதியச் சாப்பாட்டு நேரம்.

மீரா நிலத்தில் பத்திரிகைத் துண்டொன்றை விரித்து, அதில் அமர்ந்து, சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்தாள். பாணும் சீனிச் சம்பலும் பசியோடிருந்தன.

சுதா சுகயீனம் காரணமாக வேலைக்கு வராததால் மீரா தனியே சாப்பிட வேண்டியதாயிற்று. வெளியே தெரியும் காட்சிகளைப் பார்த்தபடி, பாணை பிய்த்து சம்பலில் தேய்த்தபடி சாப்பிடவாரம்பித்தாள்.

ஏனைய சக வேலையாட்களும் ஆங்காங்கே தங்களுக்கிஷ்டமானவர்களுடன் சாப்பிட்டுக் கொண்டும், கதைத்துச் சிரித்துக் கொண்டுமிருந்தார்கள்.

இந்திய இராணுவ லொறியொன்று முன்னே போக, பின்னால் ஏதோ ஒரு இயக்கம் ஆயுதங்களுடன் வாலாகப் போய்க் கொண்டிருந்தது. பாதையில் வந்து கொண்டிருந்தவர்கள் அந்த வாகனங்கள் தங்களைத் தாண்டும்வரை செத்து, பார்வைத் தூரத்திலிருந்து மறைந்ததும் உயிர்த்தார்கள்.

பற்களால் அரைக்கப்பட்டு, உமிழ்நீரால் நனைக்கப்பட்டு உணவு தொண்டையில் வழுக்கிக் கொண்டிருக்க, மீரா வேறு சிந்தனையாகவிருந்தாள்.

தொடர்கதை .... 41.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீண்ட நாட்களாகவே அவளை ஒரு கேள்வி உறுத்திக் கொண்டிருந்தது.

'எல்லாருமே இப்ப இருட்டில போய்க் கொண்டிருக்கிறம். அதாலதான் நிலமையள் இப்பிடி மோசமாய் இருக்குது.

அப்பிடியெண்டா நாங்க போகவேண்டிய திசை என்ன?

என்ன? '

அவளால் விடையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சிந்தனை விலக மறுத்தது.

'இப்ப கொஞ்சக் காலமாய்தான் என்ரை சிந்தனையள் இப்பிடிப் போகுது. இந்தளவு பிரச்சினையள் இவ்வளவு நாளாய் இருக்கேக்க நான் இதுகளில ஏன் அக்கறைப்படேலை?

முந்தின எனக்கும் இப்பத்தை எனக்கும் என்ன வித்தியாசம்?

வித்தியாசம் இருக்கு.

முந்தி நான் வாழ்ந்தது அம்மா, தம்பி, தங்கச்சியோட. அவை எனக்காண்டியும், நான் அவைக்காண்டியுமாய். பிரச்சினையள் எண்டு வழக்கமா எல்லாரும் சந்திக்கிற பொதுவான பாதிப்புத்தான் எங்களுக்கும் ஏற்பட்டிருக்குது. தனிப்படவோ, தாக்கமாயோ எதுவும் நடக்கேல.

அது மட்டுமே? எங்கட சீவியம் எப்பிடிப் போகப் போகுதோ எண்டதுதான் ஒரே ஒரு கவலையாய் இருந்தது. அந்தக் கவலையை அடிப்படையாய்க் கொண்டுதான் எங்கட செயற்பாடுகளும் இருந்தது.

அப்பிடியெண்டா இப்ப அந்தக் கவலை எங்க? இப்பவும் இருக்குதா? இல்லையா? '

மீனுவின் கைகள் தன்னிச்சையாக பாணைப் பிய்த்து, சம்பலுடன் உரசி, வாய்க்கு அனுப்ப, பற்களிலிருந்து ஆரம்பிக்கும் ஏனைய உணவுக்கால்வாய்தொகுதி உறுப்புகள் இயந்திரத்தனமாய் இயங்கி, அவளின் சிந்தனைக்கு பூரண சுதந்திரமளித்திருந்தன.

'அந்தக் கவலைக்கு என்ன நடந்தது?

எங்கட சீவியம் எண்டு கவலைப்பட முந்தி இருந்த எங்கடகுடும்பம் எண்ட வட்டந்தான் காரணம். அம்மா, தம்பி, தங்கச்சி எண்டு பாச, பந்தத்தால ஒரு வளையந்தான் எங்களைச் சுத்தியிருந்திருக்குது. அந்த வளையந்தான் எங்கட அக்கறையளை, கவலையளை, பார்வையளை வெளியில விசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லமாய் போகவிடாம தடுத்திருக்குது.

இப்ப... ?

தங்கச்சி செத்துப் போனாள். தம்பி வெளிநாட்டுக்குப் போனாப்பிறகு தொண்ணூறு வீதமும் அந்நியமாய்ப் போனான். வீட்ட இருக்கிறது அம்மா மட்டுந்தான். அதுவும் நடைப் பிணமாய். ஆக இப்ப நான் மட்டுந்தான். சீவயம் எண்டது என்ரை தான். இழக்கிறதுக்கு என்னட்டை எதுவுமே இல்லாமப் போச்சு.

இதுதான், இந்த நிலமைதான் என்ரை இப்பத்தை சிந்தனையளுக்கு, நோக்குகளுக்கு காரணமோ?

அப்பிடியெண்டா இழக்க இனிமேல் எதுவுமில்லையெண்ட மட்டிலதான் எங்களால விசாலமாய் பாக்க முடியுமோ? தூர நோக்கோட யோசிக்க முடியுமோ? எங்களைப் பற்றி மட்டுமில்லாமல் மற்றவையின்ரை சீவியத்தைப் பற்றியும் கவலைப்பட வருமோ?

அப்பிடிப்போலதான் கிடக்குது.'

"என்ன சின்னப் பிள்ளையள் மாதிரி பிராக்குப் பாத்துக்கொண்டு சாப்பிடுறீர்?" என்ற கேள்வி காதில் விழ, மீரா சிந்தனைகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாள்.

லதா பக்கத்தில் வந்தமர்ந்து தனது சாப்பாட்டுப் பொதியைத் திறந்தாள். அங்கேயும் பாணும் சம்பலுந்தான். மேலதிகமாக பச்சை மிளகாய் ஒன்றும் இருந்தது.

"சும்மா கொஞ்சம் யோசிச்சுக் கொண்டிருந்தன்" என்றாள் மீரா.

"என்ன எப்ப வெளிநாட்டுக்குப் போகலாமெண்டோ?" கேட்டபடியே லதா சாப்பிட ஆரம்பித்தாள்.

மீரா அந்த இடத்தில் வேலைக்கு சேர்வதற்கு முன்பிருந்தே லதா அங்கே வேலை செய்து வருகிறாள். அண்மைக் காலமாகத்தான் அவர்களிடையே சிநேகம் ஆரம்பமாகியிருந்தது. வீண் அரட்டைகளைத் தவிர்த்து ஒதுங்கியிருப்பதிலிருந்து பல விடயங்களில் வித்தியாசமாக இருப்பதாக பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தெரிந்து வைத்திருந்தார்கள். இந்த வகையில் அவர்கள் நெருங்குவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

"சீ எனக்கேன் உந்த யோசினை. என்ன இருந்தாப்போல உப்பிடிக் கேக்கிறீர்?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இல்லை.இப்ப ஆரைப் பாத்தாலும் உதுதானே கதை.கனடா யேமனியில இருந்தெல்லாம் அங்கத்தை நாட்டுப் பாஸ்போட் கிடைச்சவங்கள் இஞ்சை வந்து பெட்டையளைத் தேடுறாங்கள்.காசு,காசாய் விறண்டிறாங்கள்.இதைவிடத் தாய்,தேப்பனும் பெட்டையளை மிக்சர்,பயித்தம் பணியாரம் குடுத்து விடுற மாதிரி வெளிநாட்டு மாப்பிளையளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கினம்.சும்மாவே?நகை நட்டோட.அதுதான் உம்மையும் சும்மாகேட்டுப் பாத்தனான்" சொல்லிவிட்டு லதா மிளகாயைக் கடிக்க,மீனுவுக்குஉறைத்தது.

"நீர் சொல்லுறது உண்மைதான்.சனங்கள் இன்னும் அள்ளுப்பட்டுக் கொண்டேயிருக்கு.இது எங்க போய் முடியுமோ தெரியாது?

"இதுக்கென்ன காரணமெண்டு நீர் நினைக்கிறீர்?"

"இந்தப் பிரச்சினையள்தான்.ஆர் எங்களுக்குத் தேவையான ஆக்கள்,ஆர் எங்களுக்குத் தேவையில்லாத ஆக்கள் எண்டு ஒருத்தருக்குமே தெரியேல.எல்லாரும் சுட்டுக் கொல்லுறாங்கள்.எல்லாரும் சூடு வேண்டிச் சாகிறாங்கள்.வாயைத் திறந்து உண்மையைக் கதைக்கேலாம இருக்குது.லெக்சனுக்கு வோட் போடுறதிலயிருந்து எங்கட சுய விருப்பப்படி ஒண்டையுமே செய்யேலாமயிருக்கு.இந்தப் புரிஞ்சு கொள்ளேலாத மரணச் சூழ்நிலையிலிருந்து சனம் தப்பத்தானே பாக்கும்.இதுக்கு வேற என்ன காரணமெண்டு சொல்லுறது?கொஞ்சப் பேர்,காசு சேர்க்க,சொகுசாய் இருக்கத்தான் வெளிநாடுகளுக்குப் போகினமெண்டாலும் எல்லாரும் அப்பிடியில்லைத்தானே?"

"நீர் சொல்லுறதில அரைவாசியை நான் ஏற்றுக் கொள்ளுறன்.இப்ப இருக்கிற சூழ்நிலை புரிஞ்சுகொள்ளேலாத சூழ்நிலையெண்டு நீர் சொல்லுறது பிழை.நாங்கள்தான் சூழ்நிலையைப் புரிஞ்சு கொள்ளேல. அல்லது புரிஞ்சு கொள்ள முயற்சிக்கேல"

"எனக்கு விளங்கேல" என்றபடி மீனு காலியாகிப் போன சாப்பாட்டுப் பெட்டியை மூடினாள்.

"முயற்சிக்காதவரைக்கும் எல்லாமே கஷ்டம்தான். இப்ப இருக்கிற சூழ்நிலையள் எப்பிடியான போராட்டத்தால ஏற்பட்டிது?"லதா சாப்பிடுவதை தற்காலிகமாக நிறுத்தினாள்.

"தமிழ் இனம் ஒடுக்கப்படுகுது.எங்கடை உரிமையள் மறுக்கப்படுகுது.இனப் படுகொலையள் நடக்குது.அதால நாங்கள் சுதந்திரமா வாழ,எங்களுக்கான உரிமையளை அநுபவிக்க,எங்களுக்கெண்டொரு நாடு, எங்களுக்கெண்டொரு அரசாங்கம் வேணும்.இதைத் டேிக் கொள்ளப்போராட்டம் நடந்திது"என்றாள் மீனு.

www.tamilarangam.net

"அப்பிடியெண்டா பெரும்பான்மை இனத்தின்ரை இராணுவ பயங்காரவாதமில்லாமல், இப்ப இருக்கிற இந்தியனுமியின்ரை கரைச்சல் இல்லாமல், இன ஒழிப்பு இல்லாமல், தரப்படுத்தல் இல்லாமல், தமிழுக்கு உரிய அந்தஸ்து கிடைத்து, நாங்களும் ரோட்டில பயமில்லாம, நிம்மதியா திரிஞ்சா சரியெண்டு சொல்லுறீர்?"

"அப்பிடித்தானே?" மீரு சந்தேகமாகக் கேட்டாள்.

"அப்பிடியெண்டுதான் கனபேர் நினைக்கினம். இந்த நினைப்புக்கூட எங்கட சீரழிவுக்கு ஒரு காரணந்தான். ஆமிக்காறனிட்டையிருந்து தப்புறது மட்டுந்தான் எங்கட பிரச்சினையெண்டில்லை. ஆழமான, அடிப்படைப் பிரச்சினையள் எக்கச்சக்கமாய் இருக்குது. நாட்டைப் பிரிச்சு, எல்லையளையும் போட்டா சாதிப் பிரச்சினை, சீதனப் பிரச்சினை எல்லாம் ஒழிஞ்சிடுமே? நாள் முழுக்க ஆருக்கோ உழைச்சு குடுத்திட்டு பசியோட ரோட்டில படுத்திருக்கிற சனங்களுக்கு விடிவு வந்திடுமே?"

இப்போது மீரு நிச்சயமாகக் குழம்பிப் போனாள். இப்படிஒரு கோணத்தில் அவள் இதுவரை எதையுமே ஆராயவில்லை.

"எங்களுக்கெண்டொரு நாடு, எங்களுக்கெண்டொரு அரசாங்கம் எண்டு அமைஞ்சா நீங்க சொல்லுற பிரச்சினையளைத் தீர்க்கேலாதே? எவ்வளவோ கஷ்டப்பட்டுப் போராடிப் போட்டு இந்தப் பிரச்சினையளைத் தீர்க்காமல் விடப் போகினமே?" என்று பதிலை ஆவலாக எதிர்பார்த்து கேட்டாள்.

"எப்பிடி? ஒவ்வொருதருக்கும் மரணதண்டனை குடுத்தோ?" லதா நிதானமாகக் கேட்டுவிட்டு மறுபடி சாப்பிட ஆரம்பித்தாள்.

அவளின் கேள்வி ஏற்படுத்திய தாக்கத்தில் மீரு நீண்ட நேரம் திகைத்துப் போயிருந்தாள்.

(இன்னும் வரும்)

---

நன்றி:

6ஆம் பக்கக் கவிதைகள் – கூடைக்குள் தேசம்
சிறுகதைக்கான ஓவியம் – திசை
இலங்கை மலைநாட்டுத் தமிழர் – கொழுந்து
பின்னட்டைக் கவிதை – வண்ணச்சிறகு கவிதைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

மே 1989 கலம்: 17

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒற்றை நெற் 'கதிர்'



— வண்ணச்சிறகு

இவன்,
உதயக் கதிர்வீச்சு
உலகைத் தழுவு முன்
உழைக்கச் செல்வான்.

○

உழைப்பு உதிர்க்கும்
வியர்வை ஊற்றில்
பண்ணை வயல்களை
பசுமையாக்கி,
பசி விழிகள்
பரிதவிக்க,

○

பண்ணை முற்றத்தில்
ஒட்டிய வயிறோடும்
ஒற்றைக் கால் தவமிருந்து
பெற்ற தென்னவோ
ஒற்றை நெற்கதிர் தான்.